# சத்தியமாவது என்ன?

பிலாத்து இந்தக் கேள்வியை இயேசுவினிடத்திலே கேட்டான். இதை நாம் சற்றே கவனித்துப்பார்ப்போமாக.

சத்தியம் என்பது உண்மை. இது உள்ளானது வெளியானது என்று இரண்டாக இருக்கிறது. வெளியானது விகாரிக்குந் தோற்றமுள்ளதும் பலவேளைகளில் வஞ்சனையுள்ளதுமாயிருக்கிறது. உள்ளானதோ விகாரமற்று நிலைகொண்டது. நாம் ஒரு மனுஷனின் செய்கைகளைப் பார்த்து அவனுடைய தன்மையைப் பற்றி உத்தேசிக்கிறோம். ஆனாற் பல வேளைகளிலும் நாம் அதிற் பிழைபடுகிறோம். "ஒருவன் தன்னுள்ளத்திலே சிந்திக்கிறதின்படியே இருக்கிறான்" என்று வேதம் சொல்லுகிறது. ஒரு மரத்திலே தோன்றுவதும் பின்னழிவதுமாகிய இலைகள், பூக்கள், கனிகளுள. ஆனால் இவைகள் அந்த மரமல்ல. உள்ளே மரத்தின் ஜீவனிலே தங்கியிருக்கிற அதன் சத்துக் கண்களுக்கு விடயமாகாது; அச்சத்துவே உண்மையான மரம். இவ்வண்ணமே இப் பிரபஞ்சத்திலேயுள்ள சகல வஸ்துக்களுக்கும் ஆக உள்ளானது சகலத்துக்குங் காரணமாக இருக்கிறது. அம்மூலகாரணம் மாத்திரமே விகாரமடையாததாக நிலைத்திருக்கின்றது. மற்றையவை யாவும் விகாரமுள்ளவையும் வஞ்சனையுள்ளவையும் நம்பப்படக்கூடாதவையுமாக இருக்கின்றன. எல்லா வஸ்துக்களுக்கு முள்ளானதாக, அவைகளுக்குக் காரணமாகவிருக்கும் இப்பொருள் பரப்பொருளேயாம். அவர் சருவலோகங்களிலுமுள்ள சகல வஸ்துக்களின் உட்பொருளாயிருப்பவர் மாத்திரமல்லச் சருவலோகங்களி லெங்குமிருக்கிறார். மரத்தின் ஜீவனானது உண்மையான மரமாயிருப்பதுபோலவே மனுஷனது ஜீவனும் உண்மையான மனுஷனாக இருக்கிறது. அவ்வண்ணமாக, பிரபஞ்சத்திலேயுள்ள சகல வஸ்துக்களின் மறைவானதும் நிலைபேறுள்ளதுமான காரணம் மேலான கருத்திலே சத்தியமானதாக இருக்கிறது. இப்படியே தேவன் சத்தியமாயிருக்கிறார். நாம் அவரைக் கடைப்பிடியாய்ப் பிடிப்பதினால் வஞ்சிக்கப்படமாட்டோம். சத்தியத்தின் பரீட்சையானது நம்மை அறியாமை, பாவம் என்பவைகளிலிருந்து விடுதலையாக்குவதில் இருக்கிறது. ஒருவன் சத்தியத்தை அறிகிறபோது அறியா

மையிலிருந்து விடுதலையடைகிறான். அவன் சத்தியத்தின்படி கிரியை புரிகிறபோது பாவத்திலிருந்து விடுதலையடைகிறான். அறியாமையும் பாவமும் இருள் என்னப்படுகின்றன. அவ்விருளையகற்றுவதெதுவோ அதுவே ஒளி. ஆகையினாற் சத்தியமானது இருளிலே பிரகாசிக்கிற ஒளியாயிருக்கிறது. தேவனே மெய்ஞ்ஞான சூரியன்.

2. "இதோ மனுஷனானவரைப் பாருங்கள்" என்று பிலாத்து இயேசுவைக் காட்டிச் சொன்னான். இதினால் அவன் தான்கேட்ட கேள்விக்குத்தானே விடை கூறினான். மனுஷனே சகல வஸ்துக்களையும் அளக்கும் அளவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷன் சகலவஸ்துக்களையும் அறியக்கூடிய இயற்கையுடையவன். அவனிலே முழுச்சிருட்டிப்பும் பூரணப்படுகிறது. ஆகையினால் நாம் மனுஷனை அறிவதினால் மாத்திரம் உலகத்தின் சத்தியத்தையும் அறிகிறோம். ஆனால் நாம் ஓர் அபூரண மனுஷனை அறிவதினால் மனுஷனை எப்படியறிவோம்? சகல மனுஷரும் அபூரணர். ஒரேயொருவர் மாத்திரமே பூரணர். அவர் நாமம் இயேசுகிறிஸ்து. அவரை அறிவதினாலே மனுஷன் எப்படிப்பட்டவனாக இருக்கக்கூடியவன் என்பதையும், இதினால் அம்மனுஷனுக்காக உண்டாக்கப்பட்ட எல்லாவற்றையும் அறியலாம். மனுஷன் தேவசாயலாகச் சிருட்டிக்கப்பட்டிருக்கிறபடியால் அவனை அறிவதினாலே தேவனையும் அறிகிறோம். தேவன் எல்லையற்ற ஆவியாயிருக்கிறார். மனுஷனோ எல்லையுற்ற ஆவியாயிருக்கிறான். தேவனுடைய கிரியைகளினால் அவரையறிதல், குருடன் பரிசத்தினாற் பொருட்களை அறிதல்போலிருக்கிறது. மனுஷனைக்கொண்டு தேவனையறிதல், ஓர் படத்தைப் பார்த்து அது குறிப்பதை அறிதல்போலிருக்கிறது. ஆகையாற் தேவனை அறிவதற்கு இதிலும் ஓர் உத்தமவழி தேவையாயிருக்கிறது.

3. "நானே சத்தியம்" என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். நாம் தேவனை முகமுகமாகக் கண்டாற்போல அவரை அறிகிறதற்குக் கிறிஸ்துவே உத்தம வழி. நாம் நடுப்பகலிற் சூரியனை நேராகப் பார்க்கக் கூடாதபடியால் அச் சூரியகாந்தியைக் குறைப்பதற்குக் கருமையுள்ள கண்ணாடியொன்று வேண்டியிருக்கிறது. இவ்வண்ணமாக நாம் தேவனைச் சகல மகிமையும் பொருந்தி

ளேவராகப் பார்க்கக்கூடாதவர்களாக இருக்கிறோம். பார்ப்போமானால் உடனே நிர்மூலமாவோம். இந்நியாயமாகத் தேவன் நம்மேற் கிருபைகொண்டு தமது மகிமையை மறைத்து மனுஷனாக வந்தார். எல்லையற்றவர் தம்மை எல்லைப்படுத்தவதினாலே எல்லையுற்றவரானார். இதினால் நாம் அவரைக்காணவும் அறியவுங்கூடியவர்களாய் இருக்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவிலே காண்கிறகிரியைகள், உணர்ச்சிகள், எண்ணங்கள் யாவும், தேவனுடைய கிரியைகள், உணர்ச்சிகள், எண்ணங்களாக இருக்கின்றன. இயேசுரட்சகர் தாகமுடையவராக இருந்தபோதானும் அது அவரது மனுஷீக சுபாபத்துக்கு மாத்திரம் உரிய உணர்ச்சியாயிருந்ததென்று நாம் சாதித்தல்கூடாது. அவர் சமாரிய ஸ்திரியிடத்திற் தாகத்துக்குத் தா என்றுகேட்டபோதும், அவரே தாகமுள்ளவராக இருந்ததினாலே, அவருடைய தெய்வீகஆவியும் இவ்வருத்தத்திற் பங்கனுபவித்ததென்று நாம் நினைக்கவேண்டும். இது அவருடைய தாழ்மையின் ஓர் பங்காக இருந்தது. இவ்வண்ணமாக அவரது கிரியைகளில் ஏதாவதொன்று தெய்வீக சுபாபமற்று மனுஷீகசுபாபம் மாத்திரமுற்றதாயிருந்ததென்றாவது, அல்லது அவரது கிரியைகளில் ஏதாவதொன்று மனுஷீக சுபாபமற்றுத் தெய்வீக சுபாபம் மாத்திரமுற்றதாக இருந்ததென்றாவது நாம் சாதித்தல் கூடாது. கிறிஸ்து பிரிக்கப்பட்டவராக இருக்கவில்லை, தேவனின் உத்தம லட்சணம் அன்பேயாம். ஒரு ஆள் தன்னைப் பின்னொரு ஆளுக்குப் பூரணமாக ஒப்புக்கொடுத்தலே அன்பு. தேவன் மனுஷனாகப் பிறந்து மனுஷனை மீட்கத் தம்முயிரைக் கொடுத்ததினால், அவர் தமது மெய்ம்மையான உள்ளிலட்சணத்தை வெளியாகக் காண்பித்தார். இதினாலும் அவர் மனுஷர் தம்மில் அன்புகூரவும் அவர்கள் தம்மைப்போலாகவும் செய்கிறார். ஆகையினால் சத்தியமாயிருக்கிற தேவனை நாம் அறிகிறதற்கு இயேசுகிறிஸ்து உத்தம வழியாயிருக்கிறாரன்றிப் பாவமுள்ள மனுஷரைப் பரிசுத்தமுள்ள தேவனைப்போலாகவும் செய்கிறார்.

4. "உம்முடைய வார்த்தையே சத்தியம்" என்றும் இயேசு சொன்னார். விவிலியநூல் மனுஷரால் எழுதப்பட்ட ஓர் புத்தகம். அதிலுள்ள ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வரியிலும் மனுஷகுணங்களைக் கா

ண்கிறோம். ஆகையினாலே அது மனுஷ அனுதாபத்தைத் தூண்டி எழுப்பத்தக்க ஓர் புத்தகமாக இருக்கிறது. ஆயினும் அது தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டபடியினால், அதின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வரியிலும தேவ வெளிப்படுத்தலைக் காண்கிறோம். இயேசு ரட்சகரிலே நாம் காண்கிற யாவும், தெய்வீகம் மனுஷீகமிரண்டிற்குமுரிய தன்மையுள்ளவைகளாக இருப்பது போல், விவிலிய நூலிலே நாம் காண்கிற யாவும அவ்விரண்டின் தன்மையுள்ளவைகளாக இருக்கின்றன. கிறிஸ்து தேவனை வெளிப்படுத்தினபடியினால் "வார்த்தை" என்று சொல்லப்படுகிறார். விவிலியநூலும் அத்தன்மையுள்ளதாக இருக்கிறபடியினால் அதுவும் அந்த நாமத்தைத் தரித்திருக்கிறது. நம்மைத் தேவனிடத்திற்கு வரஅழைத்தவராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி நாம் அறிகிற முக்கிய அறிவுக்கு விவிலியநூலே மூலக் கருவி. மாம்சமாய் வந்த வார்த்தை எழுதப்பட்ட வார்த்தையின் முக்கியமான விஷயமாயிருக்கிறது. ஆகையால் விவிலிய நூல் சத்தியமாக இருக்கிறது.

விவிலியநூலானது தேவனிடத்திற்கு வரும்படி மனுஷரை அழைத்து, இவ்விதமாக அவர்களை உண்மையுள்ளவர்களாக்குகிறதினாலும் அது சத்தியமாயிருக்கிறது. இவ்வண்ணம் விசேஷித்த கருத்துகளிலே விவிலியநூல் சத்தியமாக இருக்கிறபடியினால், அதிலே அசத்தியம் நுழையவில்லையென்னும் கருத்தாலும் அது சத்தியமுள்ளதாயுமிருக்கவேண்டும். தேவ ஏவுதலின்றி மனுஷனால்மாத்திரம் ஓர்புத்தகம் எழுதப்பட்டால் அதிற் பல வழுக்களிருக்கும். அது தெய்வதன்மையற்ற புத்தகமென்று காண்பிக்கும். ஆனால் இதிலுள்ள எல்லாப் புத்தகங்களையும் மனுஷர் எழுதினாலும் வழுக்கள் நுழையாமற் காக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாயும் அது தெய்வதன்மையுள்ளதாக விளங்குகிறது.

இப்படியே அநாதி சத்தியமாயிருக்கிற தேவனைப் பூரணமாக நமக்கு வெளிப்படுத்துகிறவரும், வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறவரும், அறியாமையிலும் பாவத்திலுமிருந்து நம்மை விடுதலையாக்குகிறவருமாகிய இயேசுகிறிஸ்துவை நாம் அறியப்பண்ணுவதினால், அது சத்தியவேதம் என்னப்படுவதற்கு மேலான உரித்துள்ளதாக இருக்கிறது.

Strong and Asbury Printers, Manippay 1888, Edition 5,000.